# ஜனவரி – 01 – செவ்வாய்

## அன்னை மரியா - இறைவனின் தாய் - புது வருடம்

**“பிள்ளைகளாகவும் உரிமைப்பேறுஉடையவர்களாகவும் இருக்கிறீர்கள்” கலா 4:7**

**முதல் வாசகம் : எண்ணிக்கை 6 : 22 - 27**

ஆண்டவர் மோசேயிடம் கூறியது : “நீ ஆரோனிடமும் அவன் புதல்வரிடமும் சொல் நீங்கள் இஸ்ரயேல் மக்களுக்கு ஆசிகூற வேண்டிய முறை. ”ஆண்டவர் உனக்கு ஆசி வழங்கி உன்னைக் காப்பாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன்மேல் ஒளிரச்செய்து உன்மீது அருள் பொழிவாராக! ஆண்டவர் தம் திருமுகத்தை உன் பக்கம் திருப்பி உனக்கு அமைதி அருள்வாராக!” இவ்வாறே அவர்கள் என் பெயரை இஸ்ரயேல் மக்களிடையே நிலைநாட்டுவர் நானும் அவர்களுக்கு ஆசி வழங்குவேன்.

**பதில்பாடல் :** கடவுளே எம்மீது இரங்கி எமக்கு ஆசி வழங்குவீராக

**இரண்டாம் வாசகம் : கலாத்தியர் 4 : 4 - 7**

சகோதர சகோதரிகளே! ஆனால் காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார். நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார் அந்த ஆவி ”அப்பா, தந்தையே”, எனக் கூப்பிடுகிறது. ஆகையால் இனி நீங்கள் அடிமைகளல்ல் பிள்ளைகள்தாம் பிள்ளைகளாகவும் உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கிறீர்கள். இது கடவுளின் செயலே.

**நற்செய்தி : லூக்கா 2 : 16 – 21**

அக்காலத்தில் இடையர்கள் பெத்லகேமிற்கு விரைந்து சென்று மரியாவையும் யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும் கண்டார்கள். பின்பு அந்தக் குழந்தையைப் பற்றித் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்கள்.
அதைக்கேட்ட யாவரும், இடையர்கள் தங்களுக்குச் சொன்னவற்றைக் குறித்து வியப்படைந்தனர். ஆனால் மரியா இந் நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார். இடையர்கள் தாங்கள் கேட்டவை, கண்டவை அனைத்தையும் குறித்துக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டே திரும்பிச் சென்றார்கள். அவர்களுக்குச் சொல்லப்பட்டவாறு எல்லாம் நிகழ்ந்திருந்தது. குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டிய எட்டாம் நாள் வந்தது. தாயின் வயிற்றில் உருவாகுமுன்பே வானதூதர் சொல்லியிருந்தவாறு அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள்.

**தியானம்:** அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள். கடந்த வருடத்தின் இனிப்பானநாட்களும், பசுமையான நினைவுகளும், கசப்பானஅனுபவங்களும், கடந்து போனவையாக இருக்கட்டும். புதிய ஆண்டை இன்முகத்துடன் வரவேற்போம். எல்லா நலமும் ஆசியும் தரும் என்ற நம்பிக்கையுடன் இவ்வாண்டை வரவேற்று நம்பிக்கையுடன் பயணிப்போம். முதல் வாசகத்தில் கடவுள் ஆசி வழங்கியது போல் எமக்கும் ஆசி வழங்குவாராக! இன்று திருச்சபை யேசுவின் தாய்க்கு விழா எடுக்கின்றது. இறைமகன் மனிதனாக பிறக்ககாரணமான ஆதித்தாயின் பாவத்தைப் போக்க இன்னொரு தாய் தேவைப்படுகின்றார். அத்தாய் புனிதமானவளாக, மாசற்றவராக இருக்கவேண்டும் என்று கடவுள் விரும்பினார். அதற்காக அவரை சென்மபாவம் இல்லாதவராக பிறக்கசெய்தார். மரியாள் இறைவனின் கருவி. யேசுவை சுமப்பது என்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. கணவனை அறியுமுன்பே கருத்தாங்கி பல இன்னல்களை அனுபவித்து, வசதிகள் அற்ற மாட்டுத்தொழுவத்தில் பெற்றெடுத்து, ஏரோதுக்குப் பயந்து இரவோடு இரவாக நாடு கடந்து ஓடிய வாழ்வு என்பது சாதாரணமான ஒன்று அல்ல. ஆனால் அவையாவற்றையும் மிக இளம் வயதில் பொறுமையுடன் சகித்து, கடவுளுக்கு தான் கொடுத்த “இதோ உமது அடிமை” என்ற வாக்கை கடைசி வரை காப்பாறினார். அவ்வாறான வாழ்வை எம்மால் வாழ முடியுமா? நாம் இன்று சுகபோகங்களில் மூழ்கி இருக்கின்றோம். வசதி வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதால் மற்றவர்களைப்பற்றி சிந்திக்க நேரம் இல்லை. ஏன் கடவுளைப்பற்றி சிந்திக்கவும் நேரம் இல்லை. இது மிகவும் மனவருத்தத்திற்கு உரியது, இந்த நிலை மாறவேண்டும். எனவே இப் புதியவருடத்திலாவது அதற்கு முயற்சி எடுப்போம்.